பிரஸார் பாரதி

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

28 03 2024 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களின் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

2. திமுக அரசு சமூகநீதிக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் திமுக ஆட்சியில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்திருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

4. நாட்டின் வளர்ச்சியை முக்கியமாகக் கொண்டு பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 31 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

<u>*------ இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களின் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

ஏப்ரல் 19ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் மனுதாக்கல் நேற்றுடன் நிறைவடைந்தது.

39 தொகுதிகளிலும் மொத்தம் ஆயிரத்து 403 பேர் ஆயிரத்து 700க்கும் அதிகமான மனுக்களை தாக்கல் செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக கரூரில் 73 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுக்களை திரும்பப்பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

அதனைத் தொடர்ந்து சனிக்கிழமை மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

<<<<>>>>

திமுக அரசு சமூகநீதிக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

விருதுநகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், தமிழகத்தில் அனைத்து மக்களும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் திமுக அரசு செயல்படுவதாகத் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்பட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

விருதுநகர் மாவட்டத்தில் முக்கிய தொழிலாக உள்ள பட்டாசு தொழில் மேம்பாட்டில் மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை என்றும் திரு. மு.க. ஸ்டாலின் குறை கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்திருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நாகர்கோவில் மற்றும் தென்காசியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் நேற்று அவர் பங்கேற்றுப் பேசினார்.

கடந்த 3 ஆண்டுகளில் தமிழகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை 40 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

மின்கட்டணம் 52 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், சொத்துவரி, குடிநீர் வரி போன்றவையும் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது என திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியை முக்கியமாகக் கொண்டு பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவை தொகுதிக்கு உட்பட்ட சிங்காநல்லூரில் நடைபெற்ற கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் நாடு முழுவதும் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் திமுக அரசு மக்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கோவையின் வளர்ச்சியில் திமுக அரசு கவனம் செலுத்தவில்லை என்றும் திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<>>>>

தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

சென்னை தண்டையார்பேட்டை பகுதியில் மாணவ-மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

இந்த தேர்தலில் வாக்களிப்பதை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரோடு மக்களவை உறுப்பினர் கணேசமூர்த்தி காலமானார். அவருக்கு வயது 77.

மதிமுகவைச் சேர்ந்த கணேசமூர்த்தி கடந்த 2019ஆம் ஆண்டு தேர்தலில் திமுக கூட்டணியில், திமுக சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு அவர் தற்கொலைக்கு முயன்றதாக கூறப்படுகிறது.

இதனால் உடல்நலம் பாதிக்கப்பட்டு கோவையில் தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை கணேசமூர்த்தி உயிரிழந்தார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் மனித-விலங்கு மோதலைத் தடுப்பது தொடர்பான கூட்டம் முதுமலையில் நடைபெற்றது.

இதில் 3 மாநில அதிகாரிகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயை, தீயணைப்புத் துறையினர் அணைத்தனர்.

மீண்டும் தீ ஏற்படாமல் தடுக்க வனத்துறையினர் மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

புனிதவெள்ளி மற்றும் வார இறுதி நாட்களை ஒட்டி மாநிலம் முழுவதும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து இன்றும், நாளையும் திருவண்ணாமலை, திருச்சி, மதுரை, நாகர்கோவில் உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு ஆயிரத்து 150 பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 31ஆம் தேதி சொந்த ஊர்களில் இருந்து மக்கள் சென்னை திரும்ப தேவைக்கேற்ப சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே ஏற்பட்ட மோதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

ஃபிஜியில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 6 புள்ளி 4ஆக பதிவானது.

<<<<>>>>

ரஷ்யாவில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 140ஆக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவின் பால்டிமோர் பாலம் மீது கப்பல் மோதி ஏற்பட்ட விபத்தின்போது இந்திய மாலுமிகளின் முன்னெச்சரிக்கை செயல்பாட்டுக்கு அந்நாட்டு அதிபர் திரு. ஜோ பைடன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தேசிய புலனாய்வு முகமையான என்.ஐ.ஏ தலைமை இயக்குநராக திரு. சதானந்த் தாதே நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே ஆந்திராவில் இருந்து கடத்திவரப்பட்ட 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான குட்கா பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

சென்னையில் சொத்துவரி, தொழில்வரி உள்ளிட்டவற்றை செலுத்த வசதியாக பொதுவிடுமுறை நாட்களிலும் மாநகராட்சி வருவாய்த்துறை செயல்படும் என மாநகராட்சி நிர்வாகம் கூறியுள்ளது

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 31 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

ஹைதராபாதில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 277 ரன் எடுத்தது.

278 ரன் என்ற வெற்றி இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி, 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 246 ரன்னுக்கு ஆட்டமிழந்து தோல்வி அடைந்தது.

ஜெய்ப்பூரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**